அட்டவணை 1.34

**நன்கமையாத துறையின் சராசரி நாளாந்த கூலி வீதங்கள்**

| நன்கமையாத துறை | தொழிலாளர் வகை | நாளாந்த கூலி வீதம் | | ரூபா மாற்றம் | சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| | | 1982 | 1983 | | |
| நெல் ... | ஆண் | 30.66 | 36.61 | 5.95 | 19 |
| | பெண் | 22.26 | 26.94 | 8.42 | 21 |
| தெங்கு ... | ஆண் | 32.39 | 37.78 | 2.26 | 17 |
| | பெண் | 18.26 | 21.52 | 3.26 | 18 |
| இறப்பர் ... | ஆண் | 26.22 | 31.08 | 6.63 | 18 |
| | பெண் | 18.88 | 22.30 | 3.42 | 18 |
| தேயிலை ... | ஆண் | 22.17 | 23.81 | 1.64 | 7 |
| | பெண் | 15.86 | 16,78 | 0.92 | 6 |
| தச்சுவேலை ... | ஆண் | 53.86 | 59.94 | 6.08 | 11 |
| கொத்தனர் வேலை ... | ஆண் | 52.44 | 58.31 | 5.66 | 11 |

மூலம்: இலங்கை மத்திய வங்கியின்
நாடளாவிய தரவு சேகரிப்பு முறை

நன்கமையாத தனியார் கூலிகளின் நடத்தை மத்திய வங்கியின் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறையின்கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகளினுல் கணிக்கப்பட்டது. நெல், தெங்கு, இறப்பர், தேயிலை ஆகியவற்றின் சிறு உடைமைப் பயிர்ச்செய் கையாலும், கட்டுமானத்துறையிலுமுள்ள தொழிலாளர்களின் நாளாந்தக் கூலி கள் மீதான ஒழுங்கான அடிப்படைத் தகவல்களை இத்திட்டம் சேகரிக்கின்றது.

1983ஆம் ஆண்டில் அனைத்து துணைத்துறைகளிலும் பெயரளவு கூலிகள் அதி கரித்தவேளையில் பெருமளவு அதிகரிப்புக்கள் நெல், இறப்பர், துணைத்துறைகளில் காணப்பட்டன. நெல்துறையிலுள்ள பெண் தொழிலாளர்களின் நாளாந்தக் கூலி வீதம் 21 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் ஆண் தொழிலாளர்களின் கூலி வீதங்கள் 19 சதவீதத்தால் அதிகரித்தன. இறப்பர் பயிர்ச்செய்கையில் ஆண் பெண் தொழிலாளர்களின் கூலிகள் 18 சதவீதத்தால் அதிகரித்தன. தெங்கு, தேயிலைத் துணைத்துறைகளில் பெண் தொழிலாளர்களின் கூலிவீதங்கள் ஆண் தொழிலா ளர்களைப் போலன்றி 1982 ஆம் ஆண்டிலும் பார்க்க உயர்ந்த விகிதத்தில் அதி கரித்தன. கட்டுமானத் துறையில் தச்சுவேலை, கொத்தனர் வேலைக்கான கூலிகள் 1982 ஆம் ஆண்டிலும் பார்க்க குறைவான வீதத்தில் அதிகரித்தன. அட்டவணை 1. 34 சராசரி நாளாந்தக் கூலிவீதங்களையும் 1982 இற்கும் 1983ஆம் ஆண்டிற்கும் இடையிலுள்ள மாற்றங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

## வர்த்தகம்

கடந்த சில ஆண்டுகளின் மந்த நிலையிலிருந்து அபிவிருத்தியடைந்த நாடு கள் படிப்படியாக மீட்சியடைந்தமையும் தேயிலை, இறப்பர் விலைகளில் முன் னெப்பொழுதுமில்லாத விதத்தில் அதிகரிப்பு ஏற்பட்டமையும் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக செயலாற்றம் 1983ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க முன் னேற்றத்தைக் காட்டுகின்றமைக்குக் காரணங்களாகும்.

1983இல் ஏற்றுமதிகள் சிஎஉ நியதிகளில் 7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த வேளையில் 1977ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதற்தடவையாக இறக்குமதிகள் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. எனினும், இத்தன்மை சில பாதகமான அடிப் படைப் போக்குகளை எடுத்துக்காட்டவில்லை. இதனால் தேயிலை, இறப்பர் விலை களின் அதிகரிப்பிலிருந்தும் பெருமளவிற்குக் கிடைத்த பெருந்தோட்டப் பயிர் களின் ஏற்றுமதிகளின் பெறுமதி முன்னைய ஆண்டிலும் பார்க்க பெருமளவான அதிகரிப்பினைக் காட்டியவேளையில் இவ்வேற்றுமதிகளின் அளவு தொடர்ந்தும் வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. இறக்குமதிகளின் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச் சிக்கு பெற்றோலியம், முக்கியமாக கப்பல், வான்கலங்களைக்கொண்ட முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறைவே பெருமளவு காரணமாகும். 1982ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1983ஆம் ஆண்டில் மொத்த இறக்குமதி களில் நுகர்வுப்பொருட்களின் பங்கு அதிகரித்தவேளையில் முதலீட்டு இடைநிலைப் பொருட்களின் பங்கு வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.35

**வர்த்தக நிலுவை 1981 – 1983**

பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில்
(சி.எ.உ. பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| ஆண்டு | இறக்குமதிகள் (அ) | | ஏற்றுமதிகள்(ஆ) | | வர்த்தக நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | சுங்கம் | சீராக்கப்பட்டது (இ) | சுங்கம் | சீராக்கப் பட்டது | சுங்கம் | சீராக்கப் பட்டது |
| 1981 … | 35,530 (1,567) | 36,582 (1,614) | 20,199 (891) | 21,043 (928) | —15,331 (—676) | —15,539 (—686) |
| 1982 … | 36,876 (1,605) | 41,946 (1,826) | 21,124 (919) | 21,454 (934) | —15,751 (—686) | —20,492 (—892) |
| 1983(ஆ) … | 42,021 (1,671) | 45,553 (1,811) | 25,183 (1,001) | 25,096 (998) | —16,838 (—669) | —20,457 (—813) |

(அ) தங்கக் கட்டிகளும் நாணயங்களும் நீங்கலாக
(ஆ) தற்காலிகம்
(இ) சுங்க அறிக்கைகளில் பதிவு செய்யப்படாத கப்பல்கள், வான்கலங்கள் ஆகியவற்றின் பெறுமதிகளை உள்ளடக்குகிறது.
ஈ) மீள் ஏற்றுமதிகளை உள்ளடக்குகிறது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், உணவு ஆணையாளர் திணைக்களம், இலங்கை வளமாக்கி கூட்டுத்தாபனமும் ஏனைய முக்கிய இறக்குமதியாளர்களும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் எயர் லங்கா லிமிட்டெட், இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்.

1983ஆம் ஆண்டிலும் வர்த்தக நிலுவை பற்றுக்குறையைப் பதிவுசெய்தது. சுங்கத்தரவுகளின்படி 1983ஆம் ஆண்டில் இறக்குமதிகளின் மீதான மொத்தச் செலவினம் ரூ. 420,210 இலட்சங்களாகவும் (சிஎஉ 16,710 இலட்சம்) ஏற்றுமதி களிலிருந்தான மொத்த வருவாய்கள் ரூ. 251,830 இலட்சங்களாகவும் (சிஎஉ 10,010 இலட்சம்) அமைந்து ரூ. 168,380 இலட்சம் (சிஎஉ 6,690 இலட்சம்) கொண்ட வர்த்தகப் பற்றுக்குறையை விளைவித்தது. இது சிஎஉ நியதிகளில் முன்னைய ஆண்டின் பற்றுக்குறையான ரூ. 157,510 இலட்சங்களினை (சிஎஉ

6,860 இலட்சம்) விட 2 சதவீதம் குறைவானதாகும். கூடியளவிற்கு உண்மையான தன்மையைக் காட்டுவதற்காக சுங்கத்தரவுகள் சீராக்கம் செய்யப்பட்டபொழுது இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவினம் ரூ. 455,530 இலட்சங்களுக்கு (சிஎஉ 18,110 இலட்சம்) அதிகரித்தவேளையில் ஏற்றுமதியிலிருந்தான மொத்த வருவாய்கள் ரூ. 250,960 இலட்சங்களாக (சிஎஉ 9,980 இலட்சம்) விளங்கின. சீராக்கப்பட்ட தரவுகள் ரூ. 204,570 இலட்சம் கொண்ட (சிஎஉ 8,130 இலட்சம்) அதிகரித்த வர்த்தகப் பற்றுக்குறையைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டின் ரூ. 204,920 இலட்சம் (சிஎஉ 8,920 இலட்சம்) கொண்ட சீராக்கப்பட்ட வர்த்தகப் பற்றுக்குறையுடன் ஒப்பிடுகையில் 1983இல் ஏற்பட்ட வர்த்தகப் பற்றுக்குறை 9 சதவீதம் குறைவானதாக இருந்தது.

ஏற்றுமதி விலைச்சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு 1983இல் ஏற்றுமதி விலைகள் 1982இல் ஏற்பட்ட 8 சதவீதம்கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக 39 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் ஏற்றுமதி அளவுச்சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு ஏற்றுமதி அளவுகள் 1982ஆம் ஆண்டின் 10 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு மாறாக 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இறக்குமதி விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு இறக்குமதி விலைகள் 1982ஆம் ஆண்டின் 10 சதவீதம்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 21 சதவீதத்தால் அதிகரித்தன.

அட்டவணை 1.36

வெளிநாட்டு வர்த்தகம் 1974 — 1883

| ஆண்டு | பத்து இலட்சம் ரூபாய்கள் | | | சுட்டெண்கள் 1978 = 100 | | | | வர்த்தக மாற்று வீதங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அளவு | | விலைகள் | | |
| | ஏற்றுமதிகள் (க.எ.பெ) | இறக்குமதிகள் (கொ.கா.க.) | வர்த்தக நிலுவை | அனைத்து ஏற்றுமதிகள் | அனைத்து இறக்குகள் | அனைத்து ஏற்றுமதிகள் | அனைத்து இறக்குமதிகள் | |
| 1974 | 3,471 | 4,554 | — 1,083 | 89 | 42 | 31 | 42 | 72 |
| 1975 | 3,933 | 5,251 | — 1,318 | 107 | 52 | 29 | 49 | 58 |
| 1976 | 4,815 | 4,645 | + 170 | 102 | 57 | 34 | 44 | 78 |
| 1977 | 6,638 | 6,007 | + 631 | 94 | 73 | 55 | 54 | 102 |
| 1978 | 13,206 | 14,687 | — 1,481 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 1979 | 15,273 | 22,560 | — 7,287 | 101 | 123 | 109 | 152 | 72 |
| 1980 | 17,595 | 33,942 | —16,347 | 99 | 140 | 126 | 217 | 58 |
| 1981 | 21,043 | 36,582 | —15,539 | 102 | 145 | 129 | 282 | 46 |
| 1982 | 21,454 | 41,946 | —20,492 | 112 | 150 | 119 | 309 | 38 |
| 1983 (ஆ) | 25,096 | 45,553 | —20,457 | 109 | 180 | 165 | 375 | 44 |

*தற்காலிகமானவை
1980ஆம் ஆண்டிலிருந்து திருத்தியமைக்கப்பட்டவை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை மத்திய வங்கி.

1983ஆம் ஆண்டின் ஏற்றுமதி இறக்குமதிகள் தொடர்பான விலைகளில் ஏற்பட்ட அசைவுகளின் விளைவாக நாட்டின் வர்த்தக மாற்றுவிகிதம் 16 சதவீதத்தால் முன்னேற்றம் அடைந்தது. நாட்டின் வர்த்தக மாற்றுவிகிதம் 1977ஆம் ஆண்டிலிருந்தும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து இருந்ததினால் இம்முன்னேற்றம் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாக இருந்தது.

**ஏற்றுமதிகள்**

1983இல் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (சீராக்கப்பட்ட தரவுகள்) ரூ. 250,960 இலட்சங்களாக (சிஎஉ 9,980 இலட்சம்) அமைந்து 1982ஆம் ஆண்டிலும் பார்க்க ரூ. 36,420 இலட்சம் (சிஎஉ 640 இலட்சம்) கொண்ட அதிகரிப்பைக் காட்டின. இதனுல் ஏற்றுமதிகளின் வளர்ச்சி வீதம் ரூபாய் நியதிகளில் 17 சதவீதமாக அல்லது சிஎஉ நியதிகளில் 7 சதவீதமாகவும் காணப்பட்டதுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டில் இதே அதிகரிப்புக்கள் முறையே 2 சதவீதமாகவும் 0.6 சதவீதமாகவும் இருந்தன. ஏற்றுமதி வளர்ச்சியில் ஏற்பட்ட இவ்வுயர்ந்த வீதத்திற்கு பெருந்தோட்டப் பயிர்களின் ஏற்றுமதியின் கனிப்பொருள் ஏற்றுமதிகள், ஆடை ஏற்றுமதிகள் ஆகியவற்றிலிருந்தான வருவாய்கள் முறையே 29 சதவீதம் (சிஎஉ நியதிகளில் 18 சதவீதம்), 32 சதவீதம் (சிஎஉ நியதிகளில் 22 சதவீதம்), 35 சதவீதம் (சிஎஉ நியதிகளில் 24 சதவீதம்) அதிகரித்தமையே முழுக்காரணமாகும். எனினும், ஆடை ஏற்றுமதிகளில் பெருமளவு அதிகரிப்புக் காணப்பட்டபோதும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களை முழுமையாகப் பார்க்கையில் அதன் வருவாய்கள் சிஎஉ நியதிகளில் 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இதற்கு பெற்ருேலிய உற்பத்திகள் ஏனைய கைத்தொழில் பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே முழுக்காரணமாக இருந்தது. இதன்விளைவாக மொத்த ஏற்றுமதி வருவாய்களில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கு 1982இன் 39 சதவீதத்திலிருந்து 1983இல் 35 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த ஏற்றுமதிகளில் வேளாண்மை ஏற்றுமதிகளின் பங்கு 54 சதவீதத்திலிருந்து 58 சதவீதத்திற்கும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கும் அதிகரித்தன.

வேளாண்மை ஏற்றுமதிகளின் வகையில் தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் முறையே 31 சதவீதம் (சிஎஉ நியதிகளில் 20 சதவீதம்), 23 சதவீதம் (சிஎஉ நியதிகளில் 12 சதவீதம்), 28 சதவீதம் (சிஎஉ நியதிகளில் 17 சதவீதம்) ஆகியவற்றினுல் அதிகரித்தன. இதன்விளைவாக மொத்த ஏற்றுமதி வருவாய்களில் மரபுவழி பெருந்தோட்டத்துறையின் பங்கு 1982இன் 47 சதவீதத்திலிருந்து 1983இல் 52 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவு செய்த சிறு வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான வருவாய்களில் (ரூபா, சிஎஉ நியதிகள் இரண்டிலும்) ஏற்பட்ட வீழ்ச்சி வேளாண்மை ஏற்றுமதித்துறையில் ஏமாற்றம் தரும் பண்பாக இருந்தது. இதன் காரணமாக வேளாண்மை ஏற்றுமதிகளின் வருவாயில் ஏற்பட்ட உயர்விற்கு பெருந்தோட்டத்துறையின் வருவாயில் ஏற்பட்ட உயர்வே முக்கிய காரணமாக இருந்தது. உண்மையில், மொத்த ஏற்றுமதி வருவாய்களுக்கு தேயிலையின் பங்கு தனித்து 1982இல் 30 சதவீதத்திலிருந்து 1983இல் 33 சதவீதத்திற்கு உயர்ந்தது. அதேவேளையில் இறப்பர் ஏற்றுமதிகளின் பெறுமதி பெற்ருேலிய ஏற்றுமதியின் பெறுமதியைவிட உயர்வாக இருந்ததுடன் 1983ஆம் ஆண்டிற்கான வணிகக் கணக்கில் மூன்ருவது பெரிய செலாவணி ஈட்டுநராகவும் காணப்பட்டது.

கைத்தொழில் பொருட்களின் வகையில் பெற்றோலிய உற்பத்திகள், ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ரூபாய் நியதிகளிலும் அதே போன்று சிஎஉ நியதிகளிலும் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகள் ரூபா நியதிகளில் 18 சதவீதத்தாலும், சிஎஉ நியதிகளில் 25 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தவேளையில் ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் ரூபா நியதிகளில் 6 சதவீதத்தாலும், சிஎஉ நியதிகளில் 14 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. எனினும் இவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் புடவைகள், ஆடைகள் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட ரூ. 12,360 இலட்சம் (சிஎஉ 360 இலட்சம்) கொண்ட மிகக் கூடியளவு அதிகரிப்பினல் பெருமளவில் எதிரீடு செய்யப்பட்டு கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாயில் 7 சதவீதங் கொண்டஅதிகரிப்பை விளைவித்தன.

அவ்வாறிருந்தும்கூட, மரபுவழியல்லா உற்பத்திகளை முக்கியமாக உள்ளடக்கிய ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சி குறிப்பாக ஏற்றுமதிப்பன்முகப்படுத்தலுக்கான கொள்கைகளை வகுக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயமாக இருக்கின்றது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சியும் அண்மைய ஆண்டுகளில் காணப்பட்ட கூடியளவிற்கு பன்முகப்படுத்தப்பட்ட ஏற்றுமதி அமைப்பை நோக்கிய போக்கில் ஒரு பின்னடைவினை எடுத்துக்காட்டியது.

1983இல் தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி ரூ. 82,950 இலட்சங்களாக (சிஎஉ 3330 இலட்சம்) விளங்கி ரூ. 19,530 இலட்சம் (சிஎஉ 540 இலட்சம்) கொண்டதொரு அதிகரிப்பைக் காட்டியது. இவ்வதிகரிப்பு உற்பத்தியிலும், ஏற்றுமதி செய்யப்பட்ட அளவிலும் பெருமளவு வீழ்ச்சி காணப்பட்டபோதும் அடையப்பட்டது. மொத்த உற்பத்தி 1790இலட்சம் கிலோக்களுக்கு 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் ஏற்றுமதி அளவு 13 சதவீதத்தால் 1,580 இலட்சம் கிலோகிரும்களுக்கு வீழ்ச்சியடைந்தது. உற்பத்தியில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி, கொழும்பு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டதேயிலையின் அளவு 1982ஆம் ஆண்டின் 1,810 இலட்சம் கிலோகிரும்களிலிருந்து 1983இல் 1,670 இலட்சம் கிலோகிரும்களுக்கு 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமையைப் பிரதிபலிக்கின்றது. அதேவேளையில், இலண்டன் ஏலங்களுக்கு விடப்பட்ட இலங்கைத் தேயிலையின் அளவும்கூட 1982 இன் 38 இலட்சம் கிலோகிரும்களிலிருந்து 1983இல் 16 இலட்சம் கிலோகிரும்களுக்கு 58 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு அண்மைய ஆண்டுகளில் வீழச்சியடைந்து கொண்டு வருவதுடன் இவ்வாண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 1956 ஆம் ஆண்டிலிருந்து பதிவு செய்யப்பட்டவற்றில் அதிகக்குறைவானதாகவும் இருந்தது. 1983 ஆம் ஆண்டின் தேயிலை ஏற்றுமதி அளவு 1975ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட உயர் மட்டமான 2,130 இலட்சம் கிலோகிரும்களுடன் ஒப்பிடுகையில் 550 இலட்சம் கிலோக்கள் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது.

தேயிலையின் ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட வீழ்ச்சி தேயிலை விலைகளில் ஏற்பட்ட (கஏபெ) முன்னெப்பொழுதுமில்லாத 50 சதவீதம் சிஎஉ நியதிகளில் 38

அட்டவணை 1.37

## ஏற்றுமதிகளின் அமைப்பு 1981—1983

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சி. எ. உ. பத்து இலட்சம் | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1981 | 1982 | 1983 (உ) | 1981 | 1982 | 1933 | 1981 | 1982 | 1983 |
| 1. வேளாண்மை ஏற்றுமதிகள் ... | 12,170 | 11,656 | 14,554 | 537 | 507 | 579 | 57.8 | 54.3 | 58.0 |
| 1.1 தேயிலை ... | 6,444 | 6,342 | 8,295 | 284 | 276 | 330 | 30.6 | 29.6 | 33.1 |
| 1.2 இறப்பர் ... | 2,889 | 2,323 | 2,852 | 127 | 101 | 114 | 13.7 | 10.8 | 11.4 |
| 1.3 தெங்கு ... | 1.438 | 1,496 | 1.921 | 64 | 65 | 76 | 6.8 | 7.0 | 7.6 |
| 1.3.1 உள்ளீட்டு உற்பத்திகள் ... | 1,011 | 1,003 | 1,409 | 45 | 44 | 56 | 4.8 | 4.7 | 5.6 |
| 1.3.2 ஏனையவை ... | 427 | 494 | 582 | 19 | 21 | 20 | 2.0 | 2.3 | 2.0 |
| 1.4 சிறு வேளாண்மை உற்பத்திகள்(அ) ... | 1,399 | 1,495 | 1,486 | 62 | 65 | 59 | 6.7 | 6.9 | 5.9 |
| 2. கைத்தொழில் ஏற்றுமதிகள் (அ) (ஆ) ... | 7,296 | 8,271 | 8,821 | 322 | 360 | 351 | 34.7 | 38.6 | 35.1 |
| 2.1 புடவையும் ஆடைகளும் ... | 3,021 | 3,502 | 4,738 | 133 | 152 | 188 | 14.4 | 16.3 | 18.9 |
| 2.2 பெற்றோலிய உற்பத்திகள் ... | 3,375 | 3,280 | 2,682 | 149 | 143 | 107 | 16.0 | 15.3 | 10.6 |
| 2.3 ஏனையவை ... | 900 | 1,489 | 1,401 | 40 | 65 | 56 | 4.3 | 7.0 | 5.6 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதிகள் ... | 792 | 859 | 1,132 | 35 | 37 | 45 | 3.8 | 4.0 | 4.5 |
| 3.1 இரத்தினக் கற்கள் ... | 633 | 685 | 940 | 28 | 30 | 37 | 3.0 | 3.2 | 3.7 |
| 3.2 ஏனையவை ... | 159 | 174 | 192 | 7 | 7 | 8 | 0.8 | 0.8 | 0.8 |
| 4. பகுக்கப்படாதவைகள்(இ) ... | 785(ஈ) | 668 | 589 | 35 | 30 | 23 | 3.8 | 3.1 | 2.4 |
| மொத்த ஏற்றுமதிகள்(ஆ) | 21,043 | 21,454 | 25,096 | 928 | 934 | 998 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) கூடியளவு அடக்கத்தை பெறும்பொருட்டு தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.
(ஆ) சீராக்கப்பட்டவை.
(இ) மீள் ஏற்றுமதிகள் உட்பட
(ஈ) 1982இல் சுங்கத்தினல் திருத்தப்பட்ட ரூ. 4580 இலட்சம் (சிஎஉ 200 இலட்சம்) பெறுமதி கொண்ட ஏற்றுமதிகளை உள்ளடக்குகிறது இவற்றின் பகுப்பாய்வுகள் கிடைக்கவில்லை.
(உ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
அரச இரத்தினக் கற்கள் கூட்டுத்தாபனம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

மாற்றல்கள்: 1981 - 1 சிஎஉ = ரூ. 22.67
1982 - 1 சிஎஉ = ரூ. 22.98
1983 - 1 சிஎஉ = ரூ. 25.16

சதவீதம்) கொண்ட அதிகரிப்பினுல் மிகக் கூடுதலாக எதிரீடு செய்தது. தேயிலை விலைகள் 1982 இல் கிலோகிறும் ஒன்றிற்கு ரூ. 35.03 இல் (சிஎஉ 1.52) இருந்து 1983 இல் கிலோகிருமொன்றிற்கு ரூ. 52.52 இற்கு (சிஎஉ 2.09) அதிகரித்தது. (கொழும்பு ஏலங்களில் அனைத்து தேயிலைகளுக்குமாகப் பெறப்பட்ட சராசரி மொத்த விலை 1982 இல் கிலோகிருமொன்றிற்கு ரூ 23.44 இல் இருந்து 1983 இல் கிலோகிருமொன்றிற்கு ரூ. 43. 27இற்கு 85 சதவீதத்தால் அதிகரித்தது.) அதே வேளையில் இலண்டன் ஏலங்களில் இலங்கைத் தேயிலையின் விலைகள் 1982 இன் கிலோகிருமொன்றிற்கு 107. 46 பென்சுகளிலிருந்து 1983இல் கிலோகிருமொன்றிற்கு 153.40 பென்சுகளுக்கு 43 சத வீதத்தால் அதிகரித்தது தேயிலைக்குக் கிடைத்த இவ்விலாபம் மிக்க விலைகளுக்கு, உற்பத்தி செய்யும் நாடுகளின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி, நுகர்வில் ஏற்பட்ட அதிகரிப்பு ஆகியவற்றின் விளைவாக நிரம்பல் / கேள்வியில் ஏற்பட்ட சமமற்ற தன்மையே முக்கிய காரணமாக இருந்தது.

1983 யூலை 4ஆம் நாளிலிருந்தும் அனைத்துவகைத் தேயிலைகள் மீதுமான ஏற்றுமதித் தீர்வைகள் மொத்த தேயிலைக்கு கிலோகிருமொன்றிற்கு ரூ. 8.00 ஆகவும் உறைகளிலடைக்கப்பட்ட தேயிலைக்கு கிலோகிருமொன்றிற்கு ரூ. 6.50 ஆகவும் பைகளிலடைக்கப்பட்ட தேயிலைக்கு கிலோகிருமொன்றிற்கு ரூ 1.00 ஆகவும் உடன் தேயிலைக்கு கிலோகிருமொன்றிற்கு ரூ. 13.50 ஆகவும் பச்சைத் தேயிலைக்கு கிலோகிருமொன்றிற்கு ரூ. 8 00 ஆகவும் விளங்கிய அப்போதைய தீர்வை வீதங்களுக்கு மேலாக கிலோகிருமொன்றிற்கு ரூ. 1. 00 இனுல் அதிகரிக்கப்பட்டன.

இறப்பர் ஏற்றுமதிகளின் பெறுமதி 1982 இனைவிட 1983இல் ரூ. 5290 இலட்சங்களினுல் (சிஎஉ 130 இலட்சம்) குறிப்பிடத்தக்களவில் உயர்ந்தது. இவ்வதிகரிப்பிற்கு கஏபெ. விலை கிலோகிருமொன்றிற்கு ரூ. 17.68 இல் இருந்து 1983இல் ரூ. 22.77 இற்கு 29 சதவீதத்தால் அதிகரித்தமையே முழுக்காரணமாகும். எனினும். ஏற்றுமதி செய்யப்பட்ட இறப்பரின் அளவு 1982இல் 1310 இலட்சம் கிலோகிரும்களிலிருந்து 1983ல் 1250 இலட்சம் கிலோகிரும்களாக 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1983 ஆம் ஆண்டில் இறப்பரின் உற்பத்தி முன்னைய ஆண்டின் 1,250 இலட்சம் கிலோகிரும்களுக்கு எதிராக 1,350 இலட்சம் கிலோகிரும்களாக விளங்கி 8 சதவீதம் கொண்ட அதிகரிப்பை எடுத்துக்காட்டியது.

மீளாய்விற்குரிய ஆண்டுப்பகுதியில் கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட நாடுகளின் பொருளாதார மீட்சியைத் தொடர்ந்து இறப்பர் வர்த்தகத்தில் அதிகரித்த கேள்வி காணப்பட்டது. அத்துடன் பன்னுட்டு இயற்கை இறப்பர் அமைப்பு இருப்புக்களை கொள்வனவு செய்யவோ அல்லது விற்கவோ இல்லையாகையால் அதன் இருப்புகளும் அதேமட்டத்திலேயே இருந்தன. இலங்கை - சீன வர்த்தக முதல் நிலை உடன்படிக்கை பண்ட மாற்றல் கொடுக்கல் வாங்கல்களுக்கான ஏற்பாடுகள் எதுவுமின்றியே 1983 இலும் தொடர்ந்தது. எனினும், சீனுவிற்கான இறப்பர் ஏற்றுமதி 1982 ஆம் ஆண்டினைவிட 100 சதவீதத்திற்கும் மிகக் கூடுதலாக அதிகரித்தது. இறப்பர் ஏற்றுமதி மீதான தீர்வை 1983 ஆம் ஆண்டு யூனில் கிலோகிருமொன்றிற்கு ரூ. 1. 00 இனுல் குறைக்கப்பட்டது.

தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1983 இல் 28 சத வீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 17 சதவீதம்) ரூ. 19,210 இலட்சங்களுக்கு (சிஎஉ 760 இலட்சம்) அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்கு உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதிப் பெறுமதியில் ஏற்பட்ட 40 சதவீதம் (சிஎஉ நியதிகளில் 28 சதவீதம்) கொண்ட உயர்வே பெருமளவிற்குக் காரணமாக இருந்தது. தெங்குத்துணை உற்பத்திகளின் ஏற்றுமதிகளும் ரூபா நியதிகளில் 4 சதவீதத்தினுல் அதிகரித்தனவெனினும் சிஎஉ நியதிகளில் 6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டின. தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளிலிருந்தான அதிகரித்த வருவாய்கள் சராசரி கஏபெ விலைகள், ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களினுல் தோன்றியதாகும். தேங்காய்த்துருவல், தேங்காய் எண்ணெய், உலர்த்திய தேங்காய் ஆகியவற்றின் ஏற்றுமதிகளிற்கு சமமான காய்கள் 1982 இல் 5,690 இலட்சம் காய்களிலிருந்து 1983இல் 5,820 இலட்சம் காய்களுக்கு அதிகரித்தவேளையில் காயொன்றிற்கான சராசரி கஏபெ விலை ரூ. 1.76 இலிருந்து ரூ. 2.42 இற்கு உயர்ந்தது. மீளாய்விற்குரிய ஆண்டுப்பகுதியில் தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதிகள் உரிமத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன,

மூன்று முக்கிய ஏற்றுமதிகளின் அதிக செயலாற்றம் ஏமாற்றம் தருவதாக இருக்கின்றது. இப்பண்டங்களின் தொகுதியிலிருந்தான வருவாய்கள் முன்னைய ஆண்டின் 5 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் சிஎஉ நியதிகளில் 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இவ்வீழ்ச்சிக்கு கறுவா, பாக்கு, ஏலக்காய், எள்ளு, வெற்றிலை தயாரிக்கப்படாத புகையிலை ஆகியவற்றின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறைவே முக்கிய காரணமாகும்.

1983இல் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1982ஆம் ஆண்டின் ரூ 82.710 இலட்சங்களுடன் (சிஎஉ 3,600 இலட்சம்) ஒப்பிடுகையில் ரூ. 88,210 இலட்சங்களாக (சிஎஉ 3,510 இலட்சம்) விளங்கியதன்மூலம் ரூபா நியதிகளில் 7 சதவீத அதிகரிப்பினையும் சிஎஉ நியதியில் 3 சதவீதம் கொண்ட வீழ்ச்சியினையும் பதிவு செய்தது. எனினும், ஆடை ஏற்றுமதிகளின் பெறுமதி ரூபா நியதிகள், சிஎஉ நியதிகள் இரண்டிலும் 1982இன் ரூ. 35,020 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 1,520 இலட்சம்) 1983இல் ரூ. 47,380 இலட்சங்களுக்கு (சிஎஉ 1,880 இலட்சம்) கணிசமானளவில் அதிகரித்தது. இது மொத்த ஏற்றுமதி வருவாய்களில் அதன் பங்கை 1982இன் 16 சதவீதத்திலிருந்து 1983இல் 19 சதவீதங்களுக்கு அதிகரிப்பை ஏற்படுத்தியது. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் மேலாண்மைக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள தொழில் முயற்சியாளர்களின் ஆடை ஏற்றுமதிகள் 1983இல் ஏறத்தாழ ரூ. 18,360 இலட்சங்கள் என (சிஎஉ 730 இலட்சம்) மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

பெற்றோலிய உற்பத்திகள், ஏனைய கைத்தொழில் பொருட்கள் ஆகிய கைத்தொழில் பொருட்களின் வகைகளிலுள்ள ஏனைய இரண்டு பண்டத் தொகுதிகளினதும் ஏற்றுமதிப் பெறுமதி 1983இல் மிகக் கூடியளவில் வீழ்ச்சியடைந்தது. பெற்றோலிய உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சி 18 சதவீதமாக (சிஎஉ நியதிகளில் 25 சதவீதம்) இருந்த வேளையில் ஏனைய கைத்தொழில் பொருட்கள் 6 சதவீதத்தால்

(சிஎஉ 15 சதவீதம்) வீழ்ச்சியடைந்தன. பெற்றோலியத் தூய்மி 1983 ஆம் ஆண்டின் சனவரி, பெப்புருவரி மாதங்களில் திருத்தல், பேணல் வேலைகளுக்காக மூடப்பட்டிருந்தமையே பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கிய பொறுப்பாக இருந்தது.

கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1982இன் ரூ. 8,590இலட்சங்களிலிருந்து (சிஎஉ 370 இலட்சம்) 1983 இல் ரூ. 11,320 இலட்சங்களுக்கு (சிஎஉ 450 இலட்சம்) தொடர்ந்தும் உயர்வடைந்து 32 சதவீதம் கொண்ட (சிஎஉ நியதிகளில் 20 சதவீதம்) அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இவ்வதிகரிப்பிற்கு 37 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 25 சதவீதம்) உயர்வடைந்த இரத்தினக்கல் ஏற்றுமதிகளிலிருந்தான உயர்ந்த வருவாய்களே பெருமளவு காரணமாக இருந்தது. எனினும், இது வெட்டுவதற்காகவும் பட்டை தீட்டுவதற்காகவும் இறக்குமதிசெய்யப்பட்ட வைரங்களின் மீள் ஏற்றுமதியையும் உள்ளடக்குகின்றது.

பொதுவாகப் பார்க்கையில் 1983ஆம் ஆண்டில் ஏற்றுமதித் துறையின் செயலாற்றம் முன்னைய ஆண்டிலும் பார்க்க மிகச் சாதகமானதாக இருந்தது. எனினும் தேயிலை, இறப்பர், தெங்கு ஆகியவற்றின் விலை அதிகரிப்புக்கள் ஏற்பட்டிருக்காவிடின் ஏற்றுமதித்துறை எதிர்க்கணியமான வளர்ச்சியையே பதிவுசெய்திருக்கும் என்பது கவனிக்கப்படவேண்டியதொன்றாகும். எனவே, உயர்ந்த ஏற்றுமதிவிலைகள் பல பாதகமான போக்குகளை ஈடுசெய்திருக்கின்றன. தேயிலை, இறப்பர் ஏற்றுமதிகளின் அளவு தொடர்ந்தும் வீழ்ச்சி அடைந்திருக்கின்றது. சிறுவேளாண்மைப் பயிர்கள், உணவு, குடிபானம், புகையிலை, இரசாயன உற்பத்திகள்போன்ற ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சியும் மரபுவழியல்லா ஏற்றுமதிகளின் அபிவிருத்தி பின்தள்ளப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டுகின்றது. ஆடைகள் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அபிவிருத்தியும்கூட அத்தகைய ஏற்றுமதிகள் உயர்ந்த இறக்குமதி உள்ளடக்கத்தைக் கொண்டிருப்பதையும் அதன் விளைவாக உள்நாட்டின் கூட்டப்பட்ட பெறுமதிக்கான குறைந்த உள்ளார்ந்த வளத்தை உடையனவாக இருப்பதையும் கருத்திற் கொண்டு நோக்கவேண்டும்.

### இறக்குமதிகள்

1983இல் இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவு (சீராக்கப்பட்ட தரவுகள்) 1982ஆம் ஆண்டின் ரூ. 419,460 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 455,530 இலட்சங்களுக்கு அதிகரித்தது. ரூபா நியதிகளில் இறக்குமதிகள் முன்னைய ஆண்டிலும் பார்க்க குறைவான சதவீதத்தில் அதிகரித்தவேளையில் கூடியளவிற்கு நிலையான சிஎஉ நியதிகளில் இறக்குமதிகள் 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. சிஎஉ நியதிகளில் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி பெற்றோலிய மற்றும் போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியில் பிரதிபலிக்கின்றது.

இறக்குமதியின் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி 1982இல் சிஎஉ நியதிகளில் பதிவுசெய்யப்பட்ட 13 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்குக் குறிப்பிடத்தக்களவு

மாறுனதாகும். இறக்குமதிகளின் உள்ளமைப்பிலுள்ள அமைப்பு மாற்றங்கள் கடந்த சில ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டுவந்த மாதிரித்தன்மையிலிருந்தும் ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காட்டுகின்றது. மீளாய்விற்குரிய ஆண்டில் நுகர்வுப்பொருட்களின் பங்கு 1982இல் 21 சதவீதத்திலிருந்து 26 சதவீதத்திற்கு அதிகரித்தவேளையில் இடைநிலைப்பொருட்கள், முதலீட்டுப்பொருட்களின் பங்கு இவ்விரண்டு ஆண்டுகளுக்குமிடையே முறையே 52 சதவீதத்திலிருந்து 48 சதவீதத்திற்கும், 28 சதவீதத்திலிருந்து 27 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. நுகர்வுப்பொருட்கள் மீதான அதிகரித்த செலவினத்திற்கு சீனி, மற்றும் பால் உள்ளடங்கிய உணவுப்பொருள்கள், புடவைகள் ஆகியவற்றின் இறக்குமதிகள் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும்.

1983இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிப்பெறுமதி ரூ. 120,770 இலட்சங்களாக (சிஎஉ 4,800 இலட்சம்) அமைந்து முன்னைய ஆண்டினைவிட ரூபா நியதிகளில் 4 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்ததெனினும் சிஎஉ நியதிகளில் 5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. முதலீட்டுப் பொருட்களில் ஏறத்தாழ 43 சதவீதத்திற்கு வகைகூறிய பொறித்தொகுதி, கருவிகள், கட்டிடப்பொருட்களின் துணைத்தொகுதி ஆகியன மீதான செலவினம் 1983இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களை பதிவுசெய்தன. பொறித்தொகுதி கருவிகளினது இறக்குமதியின் பெறுமதி 1982இல் ரூ. 39,640 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 1,730 இலட்சம்) 1983இல் ரூ. 52,610 இலட்சங்களுக்கு (சிஎஉ 2,090 இலட்சம்) அதிகரித்தவேளையில் கட்டிடப்பொருட்களது இறக்குமதிகளது பெறுமதி 1982இன் ரூ. 5,570 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 240 இலட்சம்) 1983இல் ரூ. 11,770 இலட்சங்களுக்கு (சிஎஉ 470 இலட்சம்) அதிகரித்தது. போக்குவரத்துக்கருவிகள் மீதான மொத்தச்செலவினம் 1982இன் ரூ. 55,290 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 2,410 இலட்சம்) 1983இல் ரூ. 38,260 இலட்சங்களுக்கு (சிஎஉ 1,520 இலட்சம்) குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இது கப்பல்கள், வான்கலங்களினது மொத்தச்செலவான ரூ. 16,020 இலட்சங்களையும் (சிஎஉ 640 இலட்சம்) உள்ளடக்குகின்றது. போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதிப் பெறுமதியில் ஏற்பட்ட பெரும் வீழ்ச்சி 1982ஆம் ஆண்டில் ரூ. 34,560 இலட்சம் பெறுமதிக்கு ஐந்து கப்பல்களும் இரண்டு வான்கலங்களும் இறக்குமதி செய்யப்பட்டதன் விளைவாக அவ்வாண்டில் இவ்வகையின் கீழான இறக்குமதிப் பெறுமதியில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்பின் முக்கிய பிரதிபலிப்பாக இருக்கின்றது. இவ்வாண்டில் கப்பல்கள், வான்கலங்கள் தவிர்ந்த போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதி சிறிதளவு அதிகரிப்பைக் காட்டிய வேளையில் ஏனைய முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியும் அதிகரித்தன.

இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ரூ. 217,220 இலட்சங்களாக (சிஎஉ 8,640 இலட்சம்) விளங்கி முன்னைய ஆண்டிலும் பார்க்க சிறிதளவு உயர்வானதாக காணப்பட்ட வேளையில் சிஎஉ நியதிகளில் 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. கோதுமைத் தானியத்தின் மீதான இறக்குமதிச் செலவினம் ரூ. 23,400 இலட்சங்களாக (சிஎஉ 930 இலட்சம்) அமைந்து 31 சதவீதத்

அட்டவணை 1.38

## இறக்குமதிகளின் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பு 1981—1983

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சி.எஃப். பத்து இலட்சங்கள் | | | மொத்த இறக்குமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1981 | 1982(அ) | 1983(ஆ) | 1981 | 1982 | 1983 | 1981 | 1982 | 1983 |
| 1. நுகர்வுப் பொருட்கள் ... | 9,219 | 8,616 | 11,639 | 406.7 | 375.0 | 462.7 | 25.2 | 20.5 | 25.6 |
| 1.1. உணவும் குடிவகையும் ... | 4,888 | 3,561 | 5,375 | 215.6 | 155.0 | 213.7 | 13.4 | 8.5 | 11.8 |
| 1.1.1. அரிசி ... | 992 | 925 | 765 | 43.8 | 40.3 | 30.4 | 2.7 | 2.2 | 1.7 |
| 1.1.2. மா ... | 28 | 62 | 108 | 1.2 | 2.7 | 4.3 | 0.1 | 0.2 | 0.2 |
| 1.1.3. சீனி ... | 2,826 | 970 | 1,985 | 124.7 | 42.2 | 78.9 | 7.7 | 2.3 | 4.4 |
| 1.2 புடவையும் துணிகளும் ... | 2,334 | 2,167 | 2,724 | 103.0 | 94.3 | 108.3 | 6.4 | 5.2 | 6.0 |
| 1.3 ஏனையவை ... | 1,997 | 2,888 | 3,540 | 88.1 | 125.7 | 140.7 | 5.5 | 6.9 | 7.8 |
| 2. இடைநிலைப் பொருட்கள் ... | 19,275 | 21,640 | 21,722 | 850.3 | 941.8 | 863.5 | 52.7 | 51.6 | 47.7 |
| 2.1 பெற்றோலியம் ... | 9,958 | 12,274 | 11,024 | 439.3 | 534.2 | 438.2 | 27.2 | 29.3 | 24.2 |
| 2.2 வளமாக்கி ... | 1,202 | 560 | 620 | 53.0 | 24.4 | 24.7 | 3.3 | 1.3 | 1.4 |
| 2.3 இரசாயனம் ... | 663 | 729 | 832 | 29.2 | 31.7 | 33.1 | 1.8 | 1.7 | 1.8 |
| 2.4 கோதுமை ... | 1,697 | 1,787 | 2,340 | 74.9 | 77.8 | 93.0 | 4.6 | 4.3 | 5.1 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் | 7,956 | 11,591 | 12,077 | 351.0 | 504.5 | 480.1 | 21.7 | 27.6 | 26.5 |
| 3.1 பொறியும் கருவியும் ... | 3,876 | 3,964 | 5,261 | 171.0 | 172.5 | 209.1 | 10.6 | 9.5 | 11.6 |
| 3.2 போக்குவரத்துக் கருவி (இ) ... | 2,229 | 5,529 | 3,826 | 98 3 | 240.6 | 152.1 | 6.1 | 13.2 | 8.4 |
| 3.3 கட்டடப் பொருட்கள் .. | 525 | 557 | 1,177 | 23.2 | 24.2 | 46.8 | 1.4 | 1.3 | 2.6 |
| 4. பகுக்கப்படாதவை ... | 132 | 99 | 115 | 5.8 | 4.3 | 4.6 | 0.4 | 0.2 | 0.2 |
| மொத்த இறக்குமதிகள் (ஈ) ... | 36,582 | 41,946 | 45,553 | 1,613.8 | 1,825.6 | 1,810.9 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) திருத்தப்பட்டவை

(ஆ) தற்காலிகமானவை

(இ) சுங்கக் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிராத வான்கலங்கள், கப்பல்களின் இறக்குமதிப் பெறுமதியை உள்ளடக்குகிறது.

(ஈ) சீராக்கப்பட்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும்,
முதன்மை இறக்குமதியாளர்களும்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
வரையறுக்கப்பட்ட இலங்கை விமானசேவை,
இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்.

தால் அதிகரித்த வேளையில் வளமாக்கி, இரசாயனங்கள் மீதான இறக்குமதி செலவினங்கள் முறையே ரூ. 6,200 இலட்சம் (சிஎஉ 250 இலட்சம்) ரூ. 8,320 இலட் (சிஎஉ 330 இலட்சம்) ஆக அமைந்து ரூபா நியதிகளில் 11 சதவீத, 14 சதவீத உயர்வுகளைக் காட்டினவெனினும் சிஎஉ நியதிகளில் மிகக் குறைந்த சதவீதங் களாலேயே அதிகரித்தன. கோதுமை இறக்குமதியின் பெறுமதியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு இறக்குமதி செய்யப்பட்ட அளவில் ஏற்பட்ட அதி கரிப்பு ஓரளவும் சராசரி கொ.கா விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு ஓரளவும் காரணங் களாக இருந்தன. பெற்றோலிய இறக்குமதியின் பெறுமதி 1982இல் ரூ. 122,740 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 5,340 இலட்சம்) மீளாய்விற்குரிய ஆண்டில் ரூ. 110,240 இலட்சங்களுக்கு (சிஎஉ 4,380 இலட்சம்) 10 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 18 சதவீதம்) அதிகரித்து இறக்குமதி செய்யப்பட்ட இடைநிலைப் பொருட்களின் மொத்தப் பெறுமதியில் 51 சதவீதத்திற்கும் அனைத்து இறக்குமதிகளும் 24 சத வீதத்திற்கும் வகைகூறியது. பெற்றோலிய இறக்குமதிகள் மீதான குறைந்த செல வினத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெயின் அளவு, சராசரி கொ.கா விலை ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாக இருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட அளவு 23 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் மசகெண்ணெய் பீப்பாவொன்றிற்கான சராசரி கொ. கா. க. 1982 இல் 34 ஐ. அ. டொலர்களிலி ருந்து மீளாய்விற்குரிய ஆண்டில் 30 ஐ. அ. டொலர்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளிலும் உண்மை நியதிகளில் வீழ்ச்சியடைந்திருந்த நுகர்வுப் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் ரூபா நியதிகளில் முன் னைய ஆண்டினைவிட 35 சதவீத அதிகரிப்பினை (சிஎஉ நியதிகளில் 23 சதவீதம்) பதிவு செய்து மீளாய்விற்குரிய ஆண்டில் ரூ. 116,390 இலட்சங்களாக (சிஎஉ 4,630 இலட்சம்) விளங்கியது. நுகர்வுப் பொருட்களின் மீதான அதிகரித்த செலவினம் உணவு, குடிபானம், புடவைகள், ஆடைகள் ஆகியவற்றின்மீதான அதிகரித்த செலவுகளினாலேயே ஏற்பட்டது. உணவு, குடிபானம் ஆகியவற்றின் இறக்குமதிப் பெறுமதி 1982 இன் ரூ. 35,610 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 1,550 இலட்சம்) ரூ. 53,750 இலட்சங்களுக்கு (சிஎஉ 2,140 இலட்சம்) அல்லது ரூபா நியதிகளில் 51 சதவீதத்தாலும் சிஎஉ நியதிகளில் 38 சதவீதத்தாலும் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்ந்த வேளையில் புடவைகள் ஆடைகளின் இறக்குமதிப் பெறுமதி 1982 இன் ரூ. 21,670 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 940 இலட்சம்) 1983இல் ரூ 27,240 இலட் சங்களுக்கு (சிஎஉ 1080 இலட்சம்) அதிகரித்தது. இது ரூபா நியதிகளில் 26 சத வீதம் அல்லது சிஎஉ நியதிகளில் 15 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். சீனியின் மீதான இறக்குமதிச் செலவினம் 1982இன் ரூ. 9,700 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 420 இலட்சம்) 1983இல் ரூ. 19,850 இலட்சங்களுக்கு (சிஎஉ 790 இலட்சம்) அதிகரித்து மீளாய்விற்குரிய ஆண்டில் இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித் தது. இது இறக்குமதி செய்யப்பட்ட அளவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதி கரிப்பு சராசரி கொ.கா க விலை கொண்டிருந்த வீழ்ச்சி ஆகியவற்றின் முழுவிளைவா கும். அதிகரிப்புக்களைப் பதிவு செய்த ஏனைய விடயங்களாக பால், பால் உற்பத் திகள், மீன் உற்பத்திகள், ஏனைய உணவுகள் ஆகியன இருந்தன. சுதந்திர வர்த் தக வலயத்திற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள ஆடைக் கைத்தொழில்களினால்

UNIVERSITY OF MORATUWA, SRI LANKA LIBRARY

மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுவதன் பொருட்டு புடவைகள், அதிகளவில் இறக்குமதி செய்யப்பட்டமையே புடவைகள் ஆடைகள் மீதான உயர்ந்த செலவிற்கு காரணமாக இருந்தன. (அனைத்து புடவை இறக்குமதிகளும் நுகர்வுப் பொருள்களாகவே பகுக்கப்பட்டன. ஆகவே மொத்த இறக்குமதியில் நுகர்வு, இடைநிலைப் பொருட்களின் பங்கு சில திருத்தங்களுக்கு உட்பட்டனவாகும்.)

அப்புறப்படுத்தப்படும்போது கொடுப்பனவு மாதிரிகளின்படி சுங்கப்பகுதியினால் இறக்குமதிகள் வகைப்படுத்தப்படாமையினால் உதவி இறக்குமதிகளுக்கெனத் தனியான பதிவு கிடைக்கவில்லை. எனினும் வெளிநாட்டு உதவி பகிர்ந்தளிப்புக்களின் மீது கிடைக்கத்தக்க தரவுகளின் அடிப்படையில் மொத்த இறக்குமதிகளில் கணிசமான பகுதிக்கு வகைகூறும் உதவி இறக்குமதிகளை மேலெழுந்தவாரியாக மதிப்பிட முடிகிறது.* 1983 ஆம் ஆண்டிற்கான உதவி இறக்குமதிகள் 1982 இன் ரூ. 79,700 இலட்சங்களுடன் (சிஎஉ 3,470 இலட்சம்) ஒப்பிடுகையில் 1983 இல் ரூ. 95,660 இலட்சங்களாக (சிஎஉ 3,800 இலட்சம்) அமைந்தனவென்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. மொத்த இறக்குமதியில் சதவீதப் பங்கு 1982 இல் 19 சதவீதத்திலிருந்து மீளாய்விற்குரிய ஆண்டில் 21 சதவீதத்திற்கு அதிகரித்தது.

அட்டவணை 1.39

**முக்கிய இறக்குமதிகளின் அளவு — 1983**

(மெற்றிக் தொன்கள்)

| மாதம் | அரிசி | கோதுமை | சீனி | பெற்றோலியம் (மசகு எண்ணெய்) | வளமாக்கி |
|---|---|---|---|---|---|
| சனவரி ... | 32,052 | 37,000 | 39,200 | 191,055 | 10,000 |
| பெப்புருவரி ... | 17,269 | ... | 29,300 | — | 12,770 |
| மாச்சு ... | 18,308 | 109,035 | 74,787 | — | 17,200 |
| ஏப்பிறல் ... | 11,230 | 44,578 | 13,000 | 213,967 | 24,250 |
| மே ... | 4,975 | 54,616 | 7,101 | — | 16,150 |
| யூன் ... | 75 | — | 9,476 | 242,090 | 550 |
| யூலை ... | 29,169 | 57,258 | 6,009 | 29,443 | 4,530 |
| ஓகத்து ... | 18 | 62,098 | 9,283 | 227.856 | 34,940 |
| செத்தெம்பர் ... | 17,132 | 68,317 | 27,600 | 186,747 | 37,535 |
| ஒற்றோபர் ... | 7,854 | 51,336 | 22,050 | 29,481 | 25,000 |
| நவெம்பர் ... | 4,917 | 2,834 | 33,434 | 186,543 | 8,600 |
| திசெம்பர் ... | 6,989 | 88,547 | 45,843 | 184,791 | 12,720 |
| மொத்தம் (அ) (ஆ) ... | 146,973 | 578,538 | 314,876 | 1,491,973 | 204,245 |

(அ) சீராக்கப்பட்டது.
(ஆ) பிற்பட்ட சுங்கச் சீராக்கங்களின் காரணமாக மாதாந்த தரவுகள் ஆண்டு மொத்தத்திற்கு சேர்க்கப்படுவதில்லை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி.

* உதவி இறக்குமதிகளின் பெறுமதி செயற்றிட்ட உதவியின் குணகத்தை பண்டஉதவி, உணவு உதவி ப. நா. நி பொறுப்பாண்மை நிதியக்கடன்கள் முழுமைக்கும் சேர்த்துக் கொள்வதனாலேயே பெறப்பட்டது. உதவியின் மதிப்பீடு, நிதி திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு மூலவளப் பிரிவினால் பேணப்பட்ட பதிவுகளை அடிப்படையாகக் கொண்டது.

வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை

1977ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தாராளமயமாக்கப்பட்ட வர்த்தகக் கொள்கை தொடர்ச்சியாயிருந்தமையை 1983ஆம் ஆண்டு காட்டுகின்றது. பெரும்பாலான இறக்குமதிகள் நேரடிக் கட்டுப்பாடு எதுவுமின்றியிருந்தவேளையில் பொருளாதாரத்தில் தொடர்ச்சியான விரிவாக்கத்திற்கு ஏற்றுமதிகளின் வளர்ச்சி மிக இன்றியமையாததென்று கருதப்பட்டது. எனினும் 1983ஆம் ஆண்டில் ஏற்றுமதித்துறையின் அபிவிருத்திகள் ஒரு பின்னடைவினைக் காட்டின. தேயிலை, இறப்பர் இரண்டினதும் ஏற்றுமதி அளவுகளில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டவேளையில் சிறு வேளாண்மைப் பயிர்களும் அவற்றின் 1982 ஆம் ஆண்டின் ஏற்றுமதி மட்டங்களில் இருந்து கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தன. இவ்வீழ்ச்சிகள் விலை அதிகரிப்புக்களினால் எதிரீடு செய்யப்பட்டவேளையில் உறுதியான தன்மையில் ஏற்றுமதிக்கான உற்பத்தியினை அதிகரிக்கும் தேவை அளவிற்குமீறி வலியுறுத்தப்படமுடியாமலிருக்கும்.

1983இல் இறக்குமதி மீதான நாட்டின் மொத்தச் செலவு வீழ்ச்சியடைந்தது. இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்குமிடையிலான இடைவெளி முன்னைய ஆண்டிலும் பார்க்க குறைவானதாகவே இருந்தது. 1983 இன் சீராக்கப்பட்ட மொத்த வர்த்தகப் பற்றுக்குறையான சிஎஉ 8,130 இலட்சங்களில் சிஎஉ 3,800 இலட்சம் உதவி வகையின் மூலம் வகைகூறப்பட்டது.

கிடைக்கத்தக்கதாயிருக்கும் கடன் நிதிகளை முன்னுரிமைத் துறைகளுக்கு வழிப்படுத்துகின்ற நோக்குடன் கிடைக்கத்தக்க அளவு கொடுகடன் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கொடுகடன்களின் போக்கு ஆகியவற்றில் மத்தியவங்கி தொடர்ந்தும் செல்வாக்கினைச் செலுத்திக்கொண்டிருந்தவேளையில் கொடுகடனுக்கான மொத்தக் கேள்வியும் உறுதியான மட்டத்தில் பேணப்பட்டதை உறுதிப்படுத்தவேண்டியிருந்தது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே ஏற்றுமதிக்கான நிதியிடல் முன்னுரிமையைப் பெற்றிருந்தது. ஏற்றுமதிக்கொடுகடன் ஏற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளின் விபரங்கள் இவ்வறிக்கையில் பணமும் வங்கித்தொழிலும் என்ற பிரிவில் தரப்பட்டுள்ளன.

இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்திச்சபை ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கைகளை வடிவமைப்பதில் தலையாய நிறுவனமாகத் தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அமைச்சர்களின் ஏற்றுமதி அபிவிருத்திக்கழகத்தின் வழிகாட்டலின் கீழ் இச்சபை ஏற்றுமதிகள் தொடர்பான கொள்கைகளை வடிவமைக்கவும் நடைமுறைப்படுத்தவும் பொறுப்பாக இருந்தது. சபை தொடர்ந்தும் ஏற்றுமதி வழங்கல்களில் இடையூறு விளைவிக்கும் தடைகளை இனங்கண்டுகொள்ளவும் அதே போன்று ஏற்றுமதிப் பணிகளை உறுதிப்படுத்துவதற்கும் தொடர்ந்தும் முன்னுரிமை வழங்கியது. இது ஏற்றுமதியாளாகள் கொடுகடன் நிறுவனத்திலிருந்து சலுகை நியதிகளில் நடுத்தர, நீண்டகாலச் செயற்றிட்ட நிதியங்களைப் பெறுவதற்கும் சுறுசுறுப்புடன் உதவியது. 1983இல் மொத்தமாக 159 செயற்றிட்டங்கள் மத்திய வங்கியினாலும், வர்த்தக வங்கியினாலும் நிதியிடப்படுவதற்கு விதந்துரைக்கப்பட்டன. சபையின் மூலதனப் பங்கு பொதுவாக 1982இன் இறுதியில் இருந்த

ரூ. 34 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் 1983 இறுதியில் ஏறத்தாழ ரூ. 170 இலட்சம் ஆகக் காணப்பட்டது. ஏற்றுமதி வருவாய்களை அதிகரிப்பதனை அடிப்படையாக கொண்ட ஏற்றுமதி விரிவாக்கக் கொடைத்திட்டத்தின்கீழ் இவ்வாண்டில் ரூ. 1,290 இலட்சம் ரூபா ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டது. சுங்கத் தீர்வை தள்ளுபடித்திட்டத்தின்கீழான உற்பத்திகளின் மொத்த எண்ணிக்கை 193 ஆகியது. இத்திட்டத்தின்கீழ் 1983ஆம் ஆண்டில் ரூ 8,360 இலட்சம் ஏற்றுமதியாளர்களுக்கு மீளளிக்கப்பட்டது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் தீர்வை தள்ளுபடித்திட்டம் வியாபார மொத்த விற்பனைவரி அதேபோன்று ஏனைய வரிகளையும் உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டது.

ஏற்றுமதி ஊக்குவிப்பு கிராமிய நிகழ்ச்சித்திட்டத்தில் கிராம மட்டத்தில் ஏற்றுமதிகளுக்கான உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கு இவ்வாண்டுக் காலத்தில் சிறப்பான கவனம் செலுத்தப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் இவ்வாண்டுக் காலத்தில் 12 ஏற்றுமதி உற்பத்தி கிராமக் கூட்டு நிலையங்கள் பதிவுசெய்யப்பட்டன. ஏற்றுமதி உற்பத்திக்கிராமக் கூட்டு நிலையங்களின் பங்காளர்கள் குறிப்பிட்ட அந்தந்தக் கிராமங்களைச் சேர்ந்தோராகவே இருந்தனர்

1983-1987 காலப்பகுதியை உள்ளடக்குகின்ற தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டம் 1983இல் முற்றுப்பெற்றது. இக்காலமுடிவில் ஏற்றுமதியின் சராசரி வளர்ச்சிவீதம் 11 சதவீதமாக இருக்குமென இத்திட்டம் எதிர்பார்க்கின்றது. ஏற்றுமதி அபிவிருத்தியிலான முதலீடு ரூ. 120,000. இலட்சங்களாக இருக்கும் என திட்டமிடப்பட்டிருப்பதுடன் இதில் 60 சதவீதம் தனியார்துறையிலிருந்தும் கிடைக்கும்.

மீளாய்விற்குரிய ஆண்டில் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஏற்றுமதிக் கடன்களுக்கு உத்தரவாதமளித்தல், காப்புறுதி செய்தல் ஆகியனவற்றின் மூலம் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. 1983 இல் ரூ. 472 இலட்சம் பெறுமதி கொண்ட 23 புதிய காப்புறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் இருந்த காப்புறுதிப் பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை 232 ஆகியது. அத்தகைய பத்திரங்களின் பெறுமதி ரூ. 4,034 இலட்சங்களாக விளங்கி பெறுமதி நியதிகளில் 13 சதவீத அதிகரிப்பை எடுத்துக்காட்டின. ஓராண்டிற்கு முன்னர் ரூ. 9,630 இலட்சங் கொண்ட 417 உத்தரவாதங்களுக்கெதிராக 1983 ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 10,200 இலட்சம் பெறுமதிகொண்ட 440 உத்தரவாதங்கள் நடைமுறையிலிருந்தன. இவை முன், பின் கப்பலேற்றல்களையும், ஏற்றுமதிச் செயலாற்ற உத்தரவாதங்களையும் உள்ளடக்கின. தைக்கப்பட்ட ஆடைத் துறைக்கு வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் எண்ணிக்கையிலும் அதே போன்று பெறுமதி நியதியிலும் உயர்வாக இருந்தன. கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் வெளிநாட்டுச் சந்தைகளில் ஏற்றுமதியாளர்கள் போட்டியிட உதவியிருக்கின்றன.

இவ்வாண்டுக் காலத்தில் ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றமெதுவுமிருக்கவில்லை. முக்கிய ஏற்றுமதிப் பண்டங்கள் கட்டுப்பாடுகளெதுவுமின்றியிருந்தன. எனினும் தீர்வைகள், கீழ் மட்ட விலைகள் ஆகியவற்றில் குறிப்பிட்ட திருத்தங்கள் காணப்பட்டன. கறுவாச் சுருள்கள்,

தெங்கு உற்பத்திகள் உட்பட இவ்வாண்டுக் காலத்தில் மொத்தமாக 21 விடயங்கள் ஏற்றுமதி உரிமங்களுக்குட்பட்டிருந்த வேளையில் ஏற்றுமதியின் சில விடயங்கள் ஏற்றுமதிக்கு முன்னைய தரப் பரிசோதனைக்கு உட்பட்டிருந்தன. இவ்வாண்டின் தொடக்கத்தில் இறக்குமதி உரிமத்திற்குட்பட்டிருந்த விடயங்களுடன் இரும்பு, உருக்கு, சீமெந்து, பொறித் தொகுதிகள் ஆகிய குறிப்பிட்ட விடயங்கள் உரிமத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட வேளையில் மின் உற்பத்திகள் செய்தித் தாள் அச்சிடும் தாள் போன்ற குறிப்பிட்ட இறக்குமதிகள் தாராளமாக்கப்பட்டன.

உயர்ந்த பன்னாட்டுச் சந்தை விலைகள் மூலமாகக் கப்பற்படுத்துனருக்குக் கிடைக்கும் இலாபத்தில் பெரும் பகுதியைக் கவரும் நோக்குடன் யூலையில் தேயிலை மீதான ஏற்றுமதித் தீர்வை கிலோ ஒன்றிற்கு ஒரு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது. எனினும் தொகை வடிவிலான தேயிலைக்கு கிலோவொன்றிற்கு ரூ. 9.00 என்ற அதிகரித்த வீதமாக இருந்துங்கூட மொத்தக் க.ஏ.பெ விலைகளிலிருந்து அரசு ஈர்த்துக்கொண்ட பங்கு வர்த்தகத்திற்கு கணிசமான இலாபத்தை அளிக்கும் விதத்தில் வீழ்ச்சியடைந்தது. விலையிலிருந்தான இலாபத்தில் கூடியளவு பங்கினைத் தேயிலைக் கைத்தொழிலின் நீண்டகால அபிவிருத்தியை நோக்கித் திருப்பும் நோக்குடன் மீளாவிற்குரிய ஆண்டின் பின்னரைப் பகுதியில் தேயிலை மீதான பெறுமான விகித வரியும் அதேபோன்று அபிவிருத்தித் தீர்வையும் அதிகரிக்கப்பட்டன. இவ்வழிமுறைகள் ஏற்றுமதிப் பெருக்கத்தின் உள்ளார்ந்த பணவீக்கத் தாக்கத்தையும் குறைத்திருக்கும்.

இறப்பர் ஏற்றுமதிகளைப் பொறுத்தவரையில் கூடிக்குறைந்து செல்லும் தீர்வை முறை தொழிற்பாட்டிலிருந்த பன்னாட்டு விலை அசைவுகள், உயர்ந்து செல்லும் உற்பத்திச் செலவு ஆகியவற்றின் நோக்கில் 1983 யூனில் தீர்வைகளின் மட்டம் கிலோகிராமொன்றிற்கு ஏறத்தாழ ஒரு ரூபாவினால் குறைக்கப்பட்ட வேளையில் தீர்வை வரி 1983 யூலையில் கிலோகிராமொன்றிற்கு ரூ. 0.85 இலிருந்து ரூ. 1.36 இற்கு அதிகரிக்கப்பட்டது. இறப்பர் ஏற்றுமதிகள் இவ்வாண்டுக் காலத்தில் கட்டுப்பாடுகளற்றே இருந்தன. தெங்கு ஏற்றுமதிகளுக்காக பன்னாட்டுச் சந்தை விலைகளின் மாற்றங்களுக்கேற்ப தானாகவே தீர்வைகளைச் சீராக்கிக் கொள்ளுமுகமாக அனைத்துத் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளினதும் ஏற்றுமதிகள் மீது படிப்படியாக அதிகரித்துச் செல்லும் அளவினைக் கொண்ட தீர்வைகள் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தன. தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மீதான படிப்படியாக அதிகரித்துச் செல்லும் அளவினைக் கொண்ட தீர்வைகளுடன் முறுக்கப்படாத சிலிர்ப்புத் தும்புகள் மீது 15 சதவீதம் கொண்ட நிலையான தீர்வையும் விதிக்கப்பட்டது.

இயற்கைக் காரீயத்தின்மீது 25 சதவீதமான ஏற்றுமதித் தீர்வையும் கறுவாவின் மீது 5 தொடக்கம் 10 சதவீதமான தீர்வையும் விதிக்கப்பட்டன. தெங்கு உற்பத்திகள் மீதும் சில சிறு வேளாண்மை ஏற்றுமதிகள் மீதும் விதிக்கப்பட்டிருந்த கீழ் மட்ட விலைகள் பன்னாட்டுச் சந்தைகளின் விலை அசைவுகளைக் கவனத்திற்கு கொண்டு தொடர்பான அதிகாரிகளினால் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டன. இவ்வாண்டின் தொடக்கத்தில் தொழிற்பாட்டிலிருந்த தேங்காய் எண்ணெய், தேங்காய்த் துருவல் ஆகியவற்றிற்கான விலை ஆதரவுத் திட்டங்கள் பன்னாட்டுச் சந்தையில் இவ்வுற்பத்திகளுக்கான விலைகள் உயர்ந்தபொழுது மிகையானவைகளாக மாறின.

1983 ஆம் ஆண்டில் ஏற்றுமதித் தீர்வைகளைக் குறைப்பதற்கான தேவை குறைவாக இருந்ததுடன் விலை ஆதரவு திட்டங்களும் முன்னைய ஆண்டுகளிலும் பார்க்க குறைவாகவே இருந்தன. எனினும் உயர்ந்து செல்லும் உற்பத்திச் செல வின் நோக்கில் ஏற்றுமதி முயற்சிகளில் அதிகரித்த உற்பத்திக்கான தேவை கூடு தலானதாகவே இருக்கின்றது. முக்கிய ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகள் முன் னெப்போதுமில்லாத மட்டங்களுக்கு உயர்ந்தபோதும் எமது ஏற்றுமதிகளுக்கான விலைகளில் ஏற்படும் தளம்பல்களை குறிப்பாக விலைகளில் ஏற்படும் பெரும் வீழ்ச் சிகளைத் தடுப்பதற்கு பன்னாட்டு ஒத்துழைப்பிற்கூடான நடவடிக்கைகள் இன்ன மும் இன்றியமையாதனவாக இருக்கின்றன.

கடந்த அண்மையவாண்டுகளினைப் போன்றே வருவாயை அதிகரித்தல் உள் ளூர்க் கைத் தொழில்களுக்கு போதியளவு பாதுகாப்பினை வழங்கல் ஆகியவற்றின் நோக்கில் இவ்வாண்டுகாலத்திலும் இறக்குமதித் தீர்வைகள் 5 சதவீதத்திலிருந்து 500 சதவீதங்கள் வரையில் இருந்தன. ஆண்டுத் தொடக்கத்தில் பெரும்பாலான மூலப் பொருள்களினதும் பொறித் தொகுதிகளினதும் இறக்குமதிகள் 5 தொடக் கம் $12\frac{1}{2}$ சதவீதங்களுக்கிடையிலான தீர்வைக் குட்பட்டிருந்த வேளையில் இன்றி யமையாத விடயங்கள் தீர்வைகளற்றிருந்தன. எனினும் 1983 பெப்புருவரியில் அனைத்து இறக்குமதி விடயங்களுக்கும் பொருந்தக் கூடிய வீதத்தில் பொதுவான அதிகரிப்பொன்று ஏற்பட்டது. தீர்வைகளற்ற விடயங்கள் 5 சதவீதத் தீர்வைக் குட்பட்டிருந்த வேளையில் தீர்வை விதிக்கத்தக்க வீதங்கள் 25 சதவீதத்திற்குக் கீழ் இருப்பின் அவை மேலும் $2\frac{1}{2}$ சதவீத அதிகரிப்பிற்கு உட்பட்டிருப்பதுடன் 25-100 சதவீதங்களுக்கிடைப்பட்ட வீதங்கள் மேலும் 10 சதவீதப் புள்ளிகளால் அதி கரித்தன. 100 சதவீதம் அல்லது அதற்குமேல் தீர்வை விதிக்கத்தக்க விடயங்களைப் பொறுத்தவரையில் மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை. பொதுவான அதி கரிப்புகளுடன் குறிப்பிட்ட திருத்தங்களும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன. நுகர்வோருக்கு நியாயமான விலைகளைப் பேணும் நோக்கில் 1983 பெப்புருவரியில் சீனி இறக்குமதி மீதான தீர்வை கிலோவொன்றிற்கு ரூ. 5.50 இலிருந்து ரூ. 3.50 இற்கு குறைக்கப்பட்டவேளையில் புத்தகங்கள், சஞ்சிகைகள் மீதான 5 சதவீதத் தீர்வைகள் நவெம்பரில் முற்றாக நீக்கப்பட்டன. பொறித் தொகுதிகள், இரசா யனங்கள் ஆகியவற்றின் தெரிந்தெடுக்கப்பட்ட சில விடயங்கள் மீதான இறக்கு மதித் தீர்வைகள் அதிகரித்த வேளையில் பொலித்தீன் தட்டுகள், தகடுகள் இரும் புக் கம்பிகளும் பாளங்களும், உருக்கு, சுரப்பிகள், நுண்கிருமி கொல்லிகள் போன்ற குறிப்பிட்ட ஏனைய சில விடயங்கள் மீதான தீர்வைகள் குறைக்கப்பட்டன.

குடியரசுத் தலைவரின் தீர்வை ஆணைக்குழு, மதிபுரைச் சபையாக அதன் நட வடிக்கைகளைத் தொடர்ந்ததுடன் இவ்வாண்டுக் காலத்தில் பொருத்தமான தீர்வை மாற்றங்களின் மீது விதந்துரைப்புக்களையும் செய்தது.

1981 ஆம் ஆண்டில் இறக்குமதிகளுக்கும் விரிவாக்கப்பட்ட மொத்த விற்பனை வரி 1983 ஆம் ஆண்டிலும் தொடர்ந்திருந்தது. இவ்வரியின் முக்கியத்துவம் என்ன வென்றால் இறக்குமதிகளின் மீது விதிக்கப்பட்ட தயாரிப்பாளர் மொத்த விற்பனை வரியை சரிசமமாக்கியதேயாகும். இதனால் சுங்கத் தீர்வையிலுள்ள வருவாய்

மூலம் வேருக்கப்பட்டதுடன் இத்தீர்வைகள் முக்கியமாக பாதுகாப்பு மூலத்தை மட்டுமே பிரதிபலிக்கச் செய்தன. மீளாய்விற்குரிய காலப் பகுதியில் வளமாக்கி மீதான மொத்த விற்பனை வரி 4 சத வீதத்திலிருந்து 3 சதவீதத்திற்குக் குறைக்கப் பட்டதுடன் பெற்றோலியம், அரிசி, கோதுமைத்தானியம், கோதுமைமா தவிர்ந்த ஏனைய விடயங்களுக்கு 4 சதவீதமாக இருந்த வரிவிதிப்பு 6 சதவீதத்திற்கு உயர்த் தப்பட்டது. 7½ சதவீதமாக இருந்த வீதம் 10 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்ட துடன், சீனி இறக்குமதிகளுக்கான தீர்வைகள் தவிர 10 சதவீதத்திற்கு மேல் இருந்த தீர்வைகள் 5 சதவீதப் புள்ளிகளால் உயர்த்தப்பட்டன. அதேநேரம் ஏற் றுமதி அபிவிருத்தித் தீர்வை குறிப்பிட்ட இறக்குமதி விடயங்களின் மீதும் தெரிந் தெடுக்கப்பட்ட ஏற்றுமதிகளிலும் தொடர்ந்தும் விதிக்கப்பட்டன.

இலங்கைத் தேயிலைச் சபையின் குறிப்பிட்ட நிருவாக ஒழுங்கு முறைகளுக் கிணங்க கலத்தல், உறையிலடைத்தல் ஏற்றுமதிக்காக மட்டும் தேயிலை பைகளி லிடல் ஆகியவற்றிற்கான தேயிலை இறக்குமதி இவ்வாண்டிலும் தாராளமாக்கப் பட்டிருந்தது. 1982 ஆம் ஆண்டில் இறக்குமதிசெய்யப்பட்ட ரூ. 13 இலட்சம் பெறுமதிகொண்ட 42,000 கிலோகிறும்களுக்கு எதிராக இவ்வாண்டுக் காலத்தில் ரூ. 199 இலட்சம் பெறுமதிகொண்ட 557,000 கிலோகிறும்கள் தேயிலை இறக் குமதி செய்யப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் அரிசி, சீனி ஆகியவற்றின் இறக்குமதிகள் தாராளமாக்கப்பட்டிருந்தபோதும் நாட்டின் அரிசி சீனி இறக்கு மதிகளின் பெரும்பங்கு உணவு ஆணையாளர் திணைக்களத்தினுலேயே மேற்கொள் ளப்பட்டது. எனினும் கோதுமைத் தானியத்தின் இறக்குமதி தொடர்ந்தும் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் தனியுரிமையாகவேயிருந்தது.

1983 ஆம் ஆண்டுப் பகுதியில் இலங்கைத் துறைமுக மேலாண்மைச் சபை யின் கீழ் உள்ள மூன்று கலத்துறைகளிலும் முன்னைய ஆண்டின் 64 இலட்சம் தொன்களுடன் ஒப்பிடுகையில் 71 இலட்சம் தொன்கள் கொண்ட இறக்குமதி ஏற்றுமதிச் சரக்குக் கையாளப்பட்டன. கொழும்புத்துறைமுகத்தில் திருந்திய வசதிகளை வழங்கும் நோக்குடன் பல அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் இலங்கைத் துறைமுக மேலாண்மைச் சபையினுல் பொறுப்பேற்கப்பட்டன. கொழும்பிலுள்ள தீர்வையற்ற கடைத்தொகுதி 1982 ஆம் ஆண்டின் ரூ. 8,850 இலட்சங்களுக் கெதிராக 1983 இல் ரூ. 8,460 இலட்சம் பெறுமதி கொண்ட பொருள்களை விற்பனை செய்தது. இவ்வாண்டுக் காலத்தில் இலங்கை பன்னுட்டு இயற்கை இறப்பர், பன்னுட்டு கோப்பி உடன்படிக்கை ஆகியவற்றின் அங்கத்தவராக இருந்ததுடன் தேயிலை மீதான பன்னுட்டு உடன்படிக்கைக்கான பேச்சுவார்த் தைகளிலும் பங்கேற்றுக்கொண்டது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய வசதிகளி னூடாக வழிப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 1982 ஆம் ஆண்டின் ரூ. 41,760 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் 1983இல் ரூ. 46, 180 இலட்சங்களாக விளங்கியது.

**உள்நாட்டு வர்த்தகம்**

1983 ஆம் ஆண்டில் உள்நாட்டு வர்த்தகக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றமெதுவும் இல்லாதிருந்ததுடன், சுதந்திரமான சந்தைப் பொருளாதார நோக்கத்தை அடைவதற்கு சந்தை விசைகள் கட்டுப்பாடற்று இயங்குவதை உறுதிப் படுத்தும் இக்கொள்கைகளை மேலாண்மைச் சபையின் கட்டாயத் தலையீடுகள் எதுவுமின்றி நாடு தொடர்ந்தும் பின்பற்றியது. இதனால் சந்தை தலையீடுகளும் கட்டுப்பாடுகளும் ஆகக்குறைந்த மட்டத்திற்குக் குறைக்கப்பட்டதுடன் கட்டுப் பாடற்ற சந்தைப் பொருளாதாரம் தொழிற்படுவதற்கான இன்றியமையாத நுகர்வுப் பொருட்களின் பற்றுக்குறையையும் திறந்த சந்தையில் நியாயமான விலைகளில் பண்டங்கள் கிடைக்கின்றமையை உறுதிப்படுத்துவதற்காகப் பகிர்ந் தளிப்பு முறையிலுள்ள தடைகளையும் நீக்குவதற்காக சிறப்பான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. உள்நாட்டு வர்த்தகக் கொள்கையின் வெற்றி யூலை கலவரங் களைத் தொடர்ந்து கடினமான ஒரு சூழ்நிலையில் காணப்பட்டது.

கட்டுப்பாடற்ற சந்தை விசைகள் வர்த்தக நடவடிக்கைகளில் செல்வாக்கினைச் செலுத்த அனுமதிக்கப்பட்டிருந்தபோதும்கூட, விலைகளை ஒழுங்குபடுத்தவும் நியா யமான வர்த்தக நடைமுறைகளைப் பேணவும் வேண்டி நிறுவன ரீதியான ஒழுங்காக்கிப் பொறியமைப்புப்பேணப்பட்டது. இதனால் நியாயமான விலைகளை யும் இன்றியமையாத நுகர்வுப் பொருட்களின் சிறந்த பகிர்ந்தளிப்பையும் உறுதிப் படுத்தல் ஏற்றுக்கொள்ளப்படாத வர்த்தக நடைமுறைகளைக் களைதல் ஆகிய வற்றின் நோக்கில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், விலைக் கட்டுப்பாட்டுச் சட் டம் நிறுத்தலளவை, முகத்தலளவைக் கட்டளைச் சட்டம் ஆகியவற்றினை நிருவகிப்ப தாக உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் தொடர்ந்தும் இயங்கியது. மீளாய்விற் குரிய ஆண்டுப்பகுதியில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்ட விதிகளுக்குப் பொருந்தக் கூடிய நுகர்வுப் பொருட்களின் எண்ணிக்கை 376 இற்கு அதிகரித்த வேளையில் முன் னைய ஆண்டில் விலைக் கட்டுப்பாட்டிற்குட்பட்டிருந்த ஏழு விடயங்கள் மூன்றிற்குக் குறைக்கப்பட்டன. இவை மா, பாண், மைசூர்பருப்பு ஆகியவற்றைக் கொண்டிருந் தன. அத்துடன் நுகர்வோர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் (நுகர்வோர் பாதுகாப்பு நிதியை உறுதிப்படுத்துவதன் மூலம்) ஆகியவற்றை அமைப்பதன்மூலம் நுகர் வோர் இயக்கங்களை ஒன்றுதிரட்டும் முயற்சியின் வாயிலாக விரும்பத்தகாத வர்த்தக நடைமுறைகளை அகற்றுவதற்கு ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டன. இவ்வாண்டுக் காலத்தில் உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் 147 நுகர்வோர் அமைப்புகளை பதிவு செய்யக்கூடியதாகவிருந்ததன் மூலம் ஆய்வுக் குரிய ஆண்டின் இறுதியில் அமைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 1,514 ஆகியது. 1980 இல் நிறுவப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு நிதியில் ரூ. 974,563 கொண்ட தொகை இவ்வாண்டுக்காலத்தில் வரவுவைக்கப்பட்டவேளையில் நிதியிலிருந்தான கொடுப்பனவுகள் ரூ. 258,896 ஆக விளங்கின. அத்துடன் தவணைக் கொள்வனவு உடன்படிக்கையில் ஈடுபட்டுள்ள கட்சிக்காரர்களின் கடமைகளையும், கடப்பாடு களையும் ஒழுங்குபடுத்துவதற்காக 1983 யூனில் நுகர்வோர் கொடுகடன் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

தேசிய விலைகள் ஆணைக்குழு, நுகர்வோர் விருப்புக்களைப் பாதுகாக்கின்ற வேளையில் உற்பத்தியாளர்களுக்கு இன்றியமையாத ஊக்குவிப்புக்களை வழங்கு வதற்காக விலைகளை வழிநடத்தும் மேலாண்மைச் சபையாகத்தொடர்ந்துமிருந்தது. 1983ஆம் ஆண்டுப்பகுதியில் பாண், சீனி, குழந்தைகள் தானிய உணவு, பால்உணவு ஆகியவற்றினை உள்ளடக்கி 109 விலைத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அண்மைய கடந்த காலங்களைப் போன்றே 1983ஆம் ஆண்டிலும் தனியார் துறை உணவு விடயங்கள், பலசரக்குகளின் இறக்குமதியிலும் பகிர்ந்தளிப்பிலும் அதன் பங்களிப்பினை தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டது. இது குறிப்பாகசில ஆண்டுகளுக்கு முன்னர் அரசின் தனியுரிமையாக இருந்த சீனி, அரிசி ஆகியவற் றின் பகிர்ந்தளிப்பில் தெளிவாகக் காணப்பட்டது.

தாராளமாக்கப்பட்ட வர்த்தகக் கொள்கையின்கீழ் வர்த்தக ஆற்றலுடனும் திறமையுடனும் விளங்குவதற்கு அரசவர்த்தக அமைப்புக்கள் தனியார்துறை யுடன் மிகக் கடுமையாகப் போட்டியிட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆகவே அரச வர்த்தக அமைப்புக்கள் தமது நடவடிக்கைகளை பன்முகப்படுத்தவும், விரிவாக்கவும் முயற்சிகளை மேற்கொண்டன. எனினும், தனியார்துறையிலிருந்தான கடுமையான போட்டி அவர்களது நடவடிக்கைகளின் மட்டத்தில் அமுக்கத்தினை ஏற்படுத்தியது. தற்காலிக மதிப்பீடுகளின்படி அரச வர்த்தக அமைப்புக்களின் மொத்த விற்பனை 1982ஆம் ஆண்டின் ரூ. 41,230 இலட்சங்களுடன் ஒப்பிடுகை யில் 1983இல் ரூ. 59,100 இலட்சங்களாக விளங்கியது. 1983ஆம் ஆண்டின் அதி கரித்த விற்பனை உயர்ந்த விலைகளின் முக்கிய பிரதிபலிப்பாக இருந்துள்ளது. சில குறிப்பிட்ட அரச வர்த்தக அமைப்புக்களின் வர்த்தக நடவடிக்கைகள் சில குறிப்பிட்ட இன்றியமையாத பண்டங்களின் கிடைப்பனவு மட்டத்தில் அளவை யாகக் கருதப்படும் தாங்கிருப்புக்களைப் பேணுவது அவர்களது அவசியமாக இருந் தமையினால் பாதிக்கப்பட்டன. இது பல நிறுவனங்களில் காணப்பட்ட நிதிப் பிரச்சினைகளை அதிகரித்தபொழுது இதனைத்தெளிவாகக்காணமுடிந்தது. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் மைசூர் பருப்பு, பம்பாய் வெங்காயம், கொத்தமல்லி கருவாடு, செத்தல் மிளகாய் போன்ற நுகர்வுப் பொருட்களின் தாங்கிருப்புக்களைப் பேணுவதில் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தது. 1983ஆம் ஆண்டில் உணவு ஆணை யாளர் திணைக்களத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவு பெருமளவு அதிகரிப்பைப் பதிவுசெய்த வேளையில் திறந்த சந்தையில் நெற் சந்தைப்படுத்தும் சபையின் நெல் விற்பனை ஏறத்தாழ 60 சதவீதத்தினால் அதிகரித்தது.

கூட்டுறவு நிலையங்கள் 2ஆம் உலகப்போரிலிருந்தும் இன்றியமையாத நுகர்வுப் பொருட்களின் பகிர்ந்தளிப்புக்களுக்காக செறிவான அமைப்புக்களை நிறுவும் பணி களைக் கொண்டிருந்தன. அண்மைய ஆண்டுகளாக கூட்டுறவு நிலையங்கள் தனி யார்துறையிலிருந்து மிகக் கடுமையான போட்டியை எதிர்நோக்கியமையினால் அவை தமது வர்த்தகக் கொள்கைகளையும், நடைமுறைகளையும் சீராக்கிக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டன. கடந்த அண்மைக் காலத்தில் புதிய வர்த்தக நட வடிக்கைகள் தோன்றியிருக்கின்றபோதும் கூட்டுறவு நிலையங்கள் உணவு முத்தி ரைத்திட்டம், அதேபோன்று அரிசி, மா, சீனி போன்ற சார்புரீதியில் குறைந்த

இலாபங்களைக் கொண்டிருக்கும் அடிப்படை நுகர்வுப் பொருட்களின் பகிர்ந்தளிப்புக்களைக் கையாண்டது. மத்திய வங்கியின் அளவீட்டினைக் கொண்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் கூட்டுறவு நிலையங்களின் மொத்த விற்பனை 1982 இன் ரூ. 83,200 இலட்சங்களிலிருந்து 1983இல் ரூ. 93,000 இலட்சங்களுக்கு அதிகரித்திருந்தபோதும், அவற்றின்மொத்த இலாபம் 1982இன் 6சத வீதத்திலிருந்து 1983இல் 5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இச்சிறிய இலாபம் அதிகரித்த போக்குவரத்துச் செலவு மற்றும் நிருவாகச் செலவுகளை ஈடுசெய்வதற்கு மிகக் குறைவாக இருந்தமையினால் இவ்வாண்டுக் காலத்தில் கூட்டுறவுத்துறை கடுமையான நிதி இடர்பாடுகளை எதிர்நோக்கியது. உணவு ஆணையாளர் திணைக்களம், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சதொச மற்றும் மக்கள்வங்கி ஆகியவற்றிலிருந்து கொடுகடன் வசதி கிடைக்கத் தக்கதாயிருந்தும் இவ்விடர்ப்பாடுகாணப்பட்டது. 1983 ஆம் ஆண்டுப் பகுதியில் கூட்டுறவு நிலையங்களின் சில்லறை வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை 7,690 இற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் ஊழியர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 45,000 ஆகவே காணப்பட்டது.

தேசிய பகிர்ந்தளிப்பு முறையில் இன்றியமையாத பங்கினை வகிக்கும் கூட்டுறவுத்துறையின் முக்கியத்துவத்தை 1983 யூலை கலவர காலத்தில் காணக் கூடியதாகவிருந்தது. கூட்டுறவுநிலையங்கள் அடிப்படை நுகர்வு, மற்றும் இன்றியமையாத பொருட்களின் பற்றுக் குறையை நீக்குதல் அவற்றின் சமமான பங்கீடுகளை உறுதிப்படுத்தல் ஆகியவற்றில் பெறுமதி மிக்க பங்கினை ஆற்றியது. இக் காலப்பகுதியில் விரைவான விரிவாக்கம், பகிர்ந்தளிப்புக்குச் செறிவாக்கியமை, சந்தைப்படுத்தலைப் பரவலாக்கியமை ஆகியவற்றின் மூலமாக கூட்டுறவுத்துறை நுகர்வோருக்கு வழங்கிய பணி தாராளமாக்கப்பட்ட பொருளாதாரக் கருத்திலும் கூட மிக முக்கியமானதொன்றாகவே காணப்படுகின்றது. இச் சூழ்நிலைகளில்போதுமான பயிற்சிகள், வர்த்தக ரீதியில் ஆற்றல்வாய்ந்தனவாக மாற்றுவதற்கான ஊக்குவிப்புக்கள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் அவற்றின் செயலாற்றத்தை வசதிப்படுத்தி முன்னேற்றுவதற்கான தேவை ஒப்புதல்களைப் பெறவேண்டும்.

**சுற்றுலா**

1983இல் சுற்றுலாத்துறை வீழ்ச்சியைக் கண்டுள்ளவேளையில் இது முக்கியமாக அதன் கட்டுப்பாட்டுக்கு உட்படாத காரணிகளின் விளைவாக விளங்கியது. சுற்றுலா வருகைகளின் எண்ணிக்கை வருவாய்கள், விடுதி ஏற்பாடு அல்லது தொழில்நிலை போன்ற குறிகாட்டிகளின் நியதிகளில் நோக்கும்போது 1983இல் இத்துறையின் செயலாற்றம் வழமைக்கு மாறானதாக விளங்கியது. குறைந்த மட்ட நடவடிக்கைக்கான மிக முக்கிய வெளிப்படையான காரணம் யூலைக் கலவரங்களேயாகும். அத்துடன் மேற்கு ஐரோப்பாவின் பொருளாதார நிலைமை (சுற்றுலாப்பயணிகளை உருவாக்கும் மிக முக்கிய சந்தை) இன்னமும் மந்தமாகவேயிருந்தது. அதற்குக் காரணம் பல நாடுகள் மந்தமாகவிருந்து மீள்நிலைக்குத் திரும்பும் நிலையிலிருந்ததன் காரணமாக இலங்கைக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகள் எதுவும் கிடையாமல் போனமையாகும்.